# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 20010
கார்த்திகை 26
முஹறம் 21
புதன் (12-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 55
விலை சதம் 50


# மக்கள் எம்மைத் தெரிவுசெய்தது

# இழந்த தமிழீழத்தை மீட்பதற்கே

## கிழக்கிலே உங்களுக்கு செல்வாக்கிருந்தால் மாநகரசபைத் தேர்தலை நடத்திப்பாருங்கள்!

### ஆட்சியாளருக்கு பட்டிருப்பு பா. உ. சவால்!

''தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் நாம் மக்களால் இங்கு தெரிவுசெய்து அனுப்பப்பட்டது தமிழ் மக்கள் இழந்த தமிழ் ஈழத்தை மீளப்பெறுவதற்காகவே, கிழக்கு மாகாணத்திலே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஓரிருபாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டதால் கிழக்குமாகாண மக்கள் தங்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்டதாக அரசாங்கம் நினைத்தால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்— மட்டக்களப்பு மாநகரசபைத்தேர்தலை நடத்திப்பாருங்கள் என்று; தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்குவதிலிருந்தே உங்கள் கொள்கைகளை மட்டக்களப்பு மாவட்டமக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பது உங்களுக்கே புரிகிறது''

இவ்வாறு வரவு செலவுத் திட்டம் மீது பாராளுமன்றத்தில் 23-11-79ல் உரையாற்றிய பட்டிருப்புப் பா. உ,, திரு. பூ: கணேசலிங்கம் ஆட்சியாளருக்கு சவால் விடுத்தார். அவர் மேலும் தமது பேச்சில் குடுப்பிட்டதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இந்த வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்துப் பேசினார்கள். அரசாங்கக் கட்சியைப் பொறுத்தவரையிலும், ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையிலும் இந்த இரண்டு கட்சிகளும் இந்நாட்டில் அரசாங்கத்தை அமைக்கும் கட்சிகள், ஆகையால் இந்த வரவு செலவுத்திட்டம் ஒரு நல்ல திட்டம் என்பதை எடுத்துக் காட்டுவது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும், எதிர்க்கட்சியின் கொள்கை அதற்கு மாருக இருக்கும்: ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் இந்த நாட்டில்— சிங்கள ஸ்ரீலங்காவில்—அரசாங்கத்தை அமைக்கும் நோக்கம் எங்களுக்குக் கிடையாது. அவ்வாறு அமைக்கவும் முடியாது, ஆகையால் வரவு — செலவுத் திட்டத்திலே நாங்கள் எங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் நிச்சயமாக அது மக்கள் கருத்தாகவே இருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் நாம் மக்களால் இங்கு தெரிவு செய்து அனுப்பப்பட்டது தமிழ் மக்கள் இழந்த தமிழ் ஈழத்தை மீளப் பெறுவதற்காகவாகும்; அப்படியிருந்தும் நாம் இந்த வரவு செலவுத்திட்டத்தைப் பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். ஏனென்றால்; நாம் அமைக்கவிருக்கும் தமிழ் ஈழத்திலும் இந்த அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையிலும் ஒரு சில ஒருமைப்பாடு இருக்கிறது. இந்த அரசாங்கம் இந்நாட்டிலே ஜனநாயக சோசலிச அரசாங்கத்தை அரசியலமைப்பின் மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறது. நாம் அமைக்கவிருக்கும் தமிழ் ஈழம்கூட ஒரு சோசலிச ஜனநாயக தமிழ் ஈழமாகும். இந்த ஒருமைப்பாட்டின் காரணமாகத்தான் இந்த வரவுசெலவுத் திட்டத்திலே சோசலிசக் கொள்கை பொதிந்திருக்கிறதா என்பதை ஆராய முனைகிறோம்;

இந்த நாட்டிலே இன்று இலஞ்சம் மலிந்திருக்கிறது;



எங்கள் பகுதியிலே எங்கு சென்றாலும் இலஞ்சம் பற்றித்தான் பேசுகிறார்கள்; சில விஷயங்களை நான் ஆணித்தரமாக ஆதாரத்

—4-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் அந்தரங்க மகஜர்!

### சன்சோனிக் கமிஷனிலும் சமர்ப்பணம்!

அண்மையில் மூன்று மாத தடுப்புக்காவலில் பின் விடுதலை செய்யப்பட்ட தமிழ்த்தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளரும் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்தவருமான திரு.ஐ,தி, சம்பந்தமூர்த்தி ஜனாதிபதி ஜே, ஆர். ஜெயவர்த்தனவுக்கு அந்தரங்கக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இக்கடிதத்தின் பிரதியொன்று சன்சோனி ஆணைக்குழுமுன் தமிழ் அகதிகள்புனர் வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜராகும்: சட்டத்தரணி மாணிக்கவாசகம் அண்டர்லூட்டினால் ஆணையாளர் சன்சோனியின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டது;

வவுனியா தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்தின் செயலாளர் திரு: சம்பந்தமூர்த்தியால் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட அந்தரங்கக் கடிதத்தின் பிரதியை சட்டத்தரணி மாணிக்கவாசகம் அண்டர்லூட் ஆணையாளர் சன்சோனியிடம் 6,12.79ல் சமர்ப்பித்தார்;

இந்த மகஜரில் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கம் பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படக் கூடாதென்றும் அது ஆணையாளரால் அந்தரங்கமாகப் படிக்கப்பட வேண்டியதென்றும் சட்டத்தரணி அண்டர்லூட் கேட்டுக்கொண்டார்;

விசாரணையிலுள்ளவிடயம் சம்பந்தமாக யாராவது ஒரு சாட்சியை அழைக்க வேண்டுமா.என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஆணையாளருக்கேயுண்டென்றும் அதுமற்றவர்களுக்கு கிடையாதென்றும் சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கழகத்தின் சார்பில் அழைக்கப்பட்ட விருந்த ஐந்துசாட்சிகளில்மூவர்விசாரிக்கப்பட்டனர்.ஏனைய இருவரும் அழைக்கப்படமாட்டார்கள் தற்போது வடக்கில் நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டத்தின் கீழ் அப்பகுதிகளில் அச்ச

—4-ம்பக்கம் பார்க்க

## இராசதுரையின் அமைச்சின்கீழ் எந்த ஒரு திணைக்களமும் இல்லை!

### உத்தியோகத்தர்கள் தொகை ஆக 21 அதிலே தற்காலிக ஊழியர்கள் 14

### திருமதி இராசதுரையே அந்தரங்க செயலாளர்!

செல்லையாஇராசதுரையின் பிரதேச அபிவிருத்தி அமைச்சு. வெறுங்கண்துடைப்பு அமைச்சே என்பது பாராளுமன்றத்தில் காவலூரர் பா: உ: பண்டிதர் கா: பொ. இரத்தினம்தொடுத்த ஒரு கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலிலிருந்து அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்த அமைச்சின் கீழ் எந்த ஒருஅரசாங்கத்திணைக்களங்களோ. அரசாங்க நிறுவகங்களோ. அரசாங்க சார்பான நிறுவகங்களோ இயங்கவில்லையென்பதும் சந்திக்கு வந்துள்ளது,

தமிழ் மொழிச் சட்டஅமுலாக்கல் பிரிவைக் கொண்டிருக்கும் இந்த அமைச்சிடம் அரசகருமொழித் திணைக்

—4-ம் பக்கம் பார்க்க

# பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் விவகாரம்

## பிரதமர், அமிர், சிவா, தர்க்கம்!

பிரதமர்: உள்ளூராட்சித் தேர்தலுக்காக அரசியல் ஆலோசனையுடன் வடக்கில் புதியதோர் அரசியற்கட்சி அங்கீகரிக்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். புதிதாக அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு அரசியற்கட்சி திரு. அப்துல் அஸீஸின் ஜனநாயகதொழிலாளர் காங்கிரஸ் மட்டுமே.

அமிர்தலிங்கம்: இல்லை, நான் கூறியது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சம்பந்தப்பட்டது;

பிரதமர்: அவருடைய மனதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இருந்திருக்கலாம். அது 1977 பொதுத் தேர்தலின் போது அங்கீகரிக்கப்பட்ட கட்சியேதவிர புதியதாக அங்கீகரிக்கப்பட்ட கட்சியல்ல. உள்ளூராட்சித் தேர்தலின்போது, இருபிரிவினர் தாமே தமிழ் காங்கிரஸ் என்று உரிமை கொண்டாடினர். விசாரணையில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் அவர்களில் ஒரு பகுதியினரை தேர்தல் ஆணையாளர் தமிழ் காங்கிரஸ்என்று அங்கீகரித்தார், இது அரசியல் ஆலோசனையின் பேரில் செய்யப்பட்டதல்ல. முடிவு செய்யும் பொறுப்பு தேர்தல் ஆணையாளரைப் பொறுத்தது.

எம். சிவசிதம்பரம்: நான் பிரதமரை இடைமறித்து ஒன்று கூறவிரும்புகிறேன்— யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம், தமிழ் காங்கிரசின் நிர்வாகிகள் அவர்களுமல்ல—நாங்களுமல்ல என்று தீர்ப்பு அளித்திருந்ததை பிரதமர் அறிவாரா? இது மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு. தேர்தல் ஆணையாளரின் எவ்வித முடிவும் தீர்ப்பும் யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்நிலையையோ அல்லது எமக்குள்ள அரசியல் ஆதரவையோ மாற்றியமைக்கப் போவதில்லை. எனவே அது குறித்து நான் கவலைப்படவில்லை, ஆனால் நான் குறிப்பிடவிரும்புவது எல்லாம், தேர்தல் ஆணையாளரின் உத்தரவுக்கு விரோதமாக யாழ்மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்பதைத்தான். நாங்களோ, அவர்களோ தமிழ் காங்கிரசின் உத்தியோகத்தர்களாக இருப்பதற்கு உரிமையற்றவர்கள் என்பதே நீதிமன்றத்தின் தீர்ப்பு-

பிரேமதாசா: இது விஷயமும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆணையாளர் அரசியற் கட்சிகளை அங்கீகரிப்பது சம்பந்தமான சட்டத்தை நான் ஆராய்ந்தேன். இது விஷயத்தில் முடிவு எடுக்கும் போது நீதிமன்றத் தீர்ப்பையும் ஆணையாளர் ஆலோசனைக்கு எடுக்க வேண்டுமென்று எங்கும் குறிப்பிடப்படவில்லை;

எம். சிவா; நீதிமன்றத்தில் இப்பிரச்சினை ஆராயப்பட்டுவரும்போது, ஆணையாளர் இப்படியான ஒரு முடிவை நிச்சயம் எடுத்திருக்கக் கூடாது.

பிரேமதாசா: ஒரு நீதிமன்றம் தன்முன்னால்சமர்ப்பிக்கப்படும் உண்மைகளைக் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம். ஆனால் தேர்தல் ஆணையாளர் சுயேச்சையாக முடிவு செய்யலாம்.

அமிர்தலிங்கம்: 1977 பொதுத் தேர்தல் சமயத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இருந்தது. அக்கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட ஏஜண்ட அல்லது பிரதிநிதியாக வவுனியா உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரமே இருந்தார். தலைவராக நல்லூர் பா. உ., மு. சிவசிதம்பரம் இருந்தார், அவர்கள் இருவருடைய அந்தஸ்திலும் 1977 பொதுத் தேர்தலுக்கும்.இந்தஆண்டு மே மாதத்துக்குமிடையே எந்தவிதமாற்றமும் இருக்கவில்லை. ஆனால் தேர்தல் ஆணையாளருக்கு மட்டுமே தெரிந்த காரணங்களினால்; முன்பு ஒரு போதும் அங்கீகரிக்கப்படாததும் ஏற்றுக்கொள்ளப்படாததுமான மற்றக்குழுவைதேர்தல் ஆணையாளர் அங்கீகரித்தார். அவருக்கு அத்தகைய அதிகாரம் உண்டென்பதையும், அவரது முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் நாம் சவால் விட முடியாதென்பதையும் நான் அறிவேன். அதனால்தான் அப்பிரச்சினையை இங்கு எழுப்பினேன்.

பிரேமதாசா: நீதிமன்றத்தினால் எத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டாலும், தேர்தல் ஆணையாளர் தனது தீர்ப்பை வழங்க முடியும்.

எம். சிவா: அவரால் முடியும். ஆனால் அவர்அப்படிச் செய்ய வேண்டுமா என்பது வேறு விஷயம்;

அமிர்தலிங்கம்: அவர் இம்மாதிரியாக செயற்பட்டால் தன்னைத்தானே அவர் விமர்சனத்துக்குள்ளாக்கிக் கொள்வதுடன் அவரதுநேர்மைக்கும் குறை ஏற்படுகிறது.

பிரேமதாசா; இல்லை நீதிமன்றத்தில் நீதவான் தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களைக்கொண்டும் முடிவு செய்கிறார். ஆனால் ஒரு அரசியற் கட்சியை அங்கீகரிக்கும் விடயத்தில் தேர்தல் ஆணையாளர் அப்படிச் செயற்பட வேண்டியதில்லை. துரதிருஷ்டவசமாக தமது பக்கத்து நியாயத்தை எடுத்துக்கூற தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யாரும் இங்கு இருக்கவில்லை. நான் ஒரு பக்கத்து நியாயங்களை மட்டும்கேட்டு விட்டு ஒரு தீர்மானத்துக்கு வரவிரும்பவில்லை. ஆனால் தேர்தல் ஆணையாளர் இரு பக்கத்து நியாயங்களையும் கேட்டார். அது நடைபெற்றதென்பதை ஏற்கிறீர்களா?

எம். சிவா; ஆம்,

பிரேமதாசா! அவர் வழமையான முறையைப் பின்பற்றி ஒரு முடிவுக்கு வந்தார். யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் வேறோர்பிரச்சினையில் வேறு விதமாகதீர்ப்பளிக்கப்பட்டிருப்பதாக நீங்கள் கூறுவதானால்—

எம். சிவா; யார் தமிழ் காங்கிரசின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பது பற்றியே ஆணையாளரும முடிவுசெய்யவேண்டியிருந்தது; நீதிமன்றமும் அது பற்றியே முடிவு செய்ய வேண்டியிருந்தது. இம்மாதிரிப் பிரச்சினையில் மாவட்ட நீதிமன்றம் பாரபட்சமாக இருக்காதென்பதை பிரதமர் அறிவார் என்று நினைக்கிறேன்.

பிரேமதாசா! அது அல்லப் பிரச்சினை; அரசியற் கட்சிகளை அங்கீகரிப்பதில் தேர்தல்ஆணையாளருக்குரிய அதிகாரத்தையே நான் இங்கு எடுத்துக்காட்டுகிறேன், தனக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்ட விஷயங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு, எந்தக் கட்சியை அங்கீகரிக்கவேண்டும் என்று முடிவு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு; ஆணையாளரின் நேர்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ஐயுறமாட்டார் என்று நினைக்கிறேன்;

அமிர்தலிங்கம்: நான் இதுபற்றி இங்கு குறிப்பிட்டதற்கு காரணம், எதிர்காலத்தில் அவர் ஒழுங்காக நடப்பதற்கு ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டுமென்பதற்காகவே ஓர் எச்சரிக்கைக் குறிப்பாக வெளியிட்டேன்.

(பாராளுமன்றத்தில் 30-11-79)

---

# அமரர் துரைசிங்கத்துக்கு

## கூட்டணி பா. உ.க்கள் அஞ்சல்



இலங்கை அரசியல் வரலாற்றிலே அமரர் துரைசிங்கம் ஒரு சகாப்தம். அந்த சகாப்தம் முடிந்துவிட்டது. முப்பது வருடகாலத்துக்கு மேலாக ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலையை வடபகுதியிலேயே உருவாக்கிய அந்த சகாப்தம் அமரத்துவம் அடைந்து விட்டது, தந்தை செல்வாவுடனும், கோப்பாய் கோமான் வன்னிய சிங்கத்துடனும் இணைந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்ததோடு அல்லாமல் அக் கட்சியின் வளர்ச்சிக்காக ஐந்தாறுதலைமுறைக்கு வாழக்கூடிய சொத்துக்களையும், உடமைகளையும்அர்ப்பணித்துவிட்டு ஆடம்பரமற்ற அன்றாடம் காய்ச்சி வாழ்க்கை வாழ்ந்த ஒரு அற்புத மனிதர் நொத்தாரிசு துரைசிங்கம்.

திரிகரண சுத்தியாகத் தான் நம்பிய இலட்சியத்திற்கு உழைத்தவர் அமரர் துரைசிங்கம். எல்லாவற்றுக்கும் மேலாக அமரர் துரைசிங்கத்திடம் மனிதத் தன்மை நிரம்பி வழிவதை காணலாம். தன்னிலும் வயது குறைந்தவர்கள் என்றாலும், கூடியவர்கள் என்றாலும்வாஞ்சையோடும், ஆதரவோடும் அவர் அரவணைப்பதை காண இதயம் பூரிக்கும். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பகாலத்திலும் சரி. அண்மைக்காலத்திலும் சரி கட்சியின் மிக முக்கிய முடிவுகளை தந்தை செல்வாகூட நொத்தாரிசு துரைசிங்கம் அவர்களைக் கேட்டுவிட்டுத்தான் நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் முன்பு ஒரு முறை கூறியிருக்கின்றார். இதிலிருந்து நொத்தாரிசு அவர்களை தந்தை எந்த இடத்தில் வைத்திருந்தார் என்பது தெளிவாகின்றது;

எமது இனத்தின் முன்னோடித் தலைவரான இவரது இழப்பு அடிமைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் இனத்திற்கு தாங்க முடியாத பாரிய இழப்பாகும். வடபகுதி எம். பி.க்கள் பலரும் அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு மயானம் வரைக்கும் கால் நடையாகவே வந்து அமரருக்கு அஞ்சலி செலுத்தியது அவரின் புகழை எடுத்துணர்த்துவதாக அமைந்தது.

— நல்லை காந்தன்

---

இன்றுடன்
அவசரகாலச் சட்டம்

# 149 நாள்

---

# சூருவளி செய்திப் படத்தில் தமிழ் தினசரிகள் புறக்கணிப்பு!

## தமிழ்ப்பகுதி அழிவுக்கும் இருட்டடிப்பு

கடந்த ஆண்டில் மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்தில்கோரத்தாண்டவம் ஆடிய சூருவளியை பற்றிய திரைப்பட மொன்றை செய்தியாக அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் உள்ளூர் திரைகளில் (மட்டுநகர் விஜயாவிலும்) காண்பித்து வருகின்றது.

இதில் சூருவளியை பற்றிய செய்திகளை தினமின, லங்கா தீப, டைம்ஸ் ஒப் சிலோன், சிலோன் டெய்லி மிறர், சன் போன்ற பத்திரிகைகள் வெளியிட்டிருப்பது காட்டப்படுகின்றது. சிங்களப் பத்திரிகைகளும், அரசின்கட்டுப்பாட்டிலுள்ள ஆங்கிலப் பத்திரிகைகளும் தானா சூருவளிச் செய்தியை வெளியிட்டிருந்தன?

தமிழ்த் தினசரிகளான வீரகேசரி. தினபதி, ஈழநாடு போன்ற பத்திரிகைகள் வெளியிடவில்லையா? ஏன் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தினசரியான தினகரன் வெளியிட வில்லையா?

இந்தப் பத்திரிகைகள் சூருவளி பற்றிய செய்திகளை இன்னும்வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற அதே வேளையில் தமிழ்த் தேசிய தினசரிகளையும், அவை வெளியிட்ட செய்திகளையும் திரைப்படச் செய்திகளாக வெளியிடுவதில்அரசதிரைப்படக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டு புறக்கணித்து விட்டிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் விடயத்தில் தமிழ்த் தினசரிகள்கழுத்தறுக்கப்பட்டுஇருட்டடிப்பு செய்யப்பட்டு, சிங்கள பத்திரிகைகளும்சிங்கள மொழியை மூலதனமாக கொண்ட பத்திரிகைகளுமே சேவைசெய்துள்ளதாக பிற நாடுகளில் விளம்பரம் செய்து அரசியல் இலாபம் தேடப்பட்டுள்ளது.

இதுமட்டுமென்ன: சூருவளியினால் 75 வீதம்சேதத்திற்குள்ளானதுதமிழ்பேசும் பிரதேசம் என்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன,

மட்டக்களப்பு மங்களராம விகாரை, சிங்களமகா வித்தியாலயம், அம்பாறை, பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் மட்டுமே பேரழிவு ஏற்பட்டிருப்பதாக செய்திப்படம் எடுக்கப்பட்டுள்ளது,

தமிழ்ப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான வழிபாட்டுத்தலங்கள் அரசாங்க கட்டிடங்கள் கூட்டுத்தாபன அலுவலகங்கள் சூருவளியினால் தரைமட்டமாகி இன்னும் சூருவளியின் நிலையான சின்னமாக சின்னபின்னப்பட்டுக் கிடக்கின்றன நிலையில் தமிழ்ப் பிரதேசத்தில் பேரழிவு இல்லை என்றுஎடுத்துக்காட்டுவதுபோல— சிங்களப் பிரதேசங்களே சிங்கள கலாச்சாரங்களே அழிந்து விட்டதாக செய்திப் படம் காட்டுகின்றது—

—இர்வணன்

# நீங்கள் கோட்டைக்குப் போகும்போது நாம் சங்கிலித் தோப்புக்கு போவோம்!



## பாராளுமன்றத்தில் வி. என். நவரத்தினம் பேச்சு

"இன்று மாலை 6 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திச் சேவையில் என்ன கூறுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி பா,உ பிரதமரைப் புகழ்ந்து பேசியதாக, அதுபற்றிநான் கவலைப்படவில்லை; அது உண்மைதான்: ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய பாடல் இசைக்கத் தொடங்கியுள்ளதாக சில பத்திரிகைகள் எழுதக்கூடும், அது உண்மையல்ல. பிரதமருக்கு நான் தெரிவிக்கும்பாராட்டு நானும் எனது தலைவரும் தமிழ் மக்களிடமிருந்து பெற்றிருக்கும் ஆணைக்கு முரண்பட்டதாகாது.

வரலாறு படித்தவர்களுக்குத்தெரியும்— யுத்தகளத்தில் நின்று துட்டகைமுனு எல்லாளனைக் கௌரவித்தான் என்றஉண்மை, அவர்கள் இருவரும் யுத்தகளத்தில் நின்றாலும், ஒருவரையொருவர் கௌரவித்தார்கள்.

எமது மக்களிடமிருந்து நாம்பெற்ற ஆணையைவென்றெடுப்பதற்கு எமக்கு இது ஒரு போர்க்களம். துட்டகைமுனுவும் எல்லாளனும் வாளால் மோதிக் கொண்டதுபோல அல்ல— எமது வார்த்தைகளையே ஆயுதமாகக் கொண்டு போரிடுகிறோம்:

தலைவர். உங்கள் நாக்குத் தான் உங்கள் ஆயுதம்,

வி,என்: ஆம். அது சில சமயங்களில் அணுவாயுதங்களைவிட வலிமை வாய்ந்தது நான் பிரதமரைபாராட்டும்போது, பத்திரிகைகள் என்னைத்தவறாக எடைபோட வேண்டாம். எமது அரசியல் இலட்சியத்தில் நாம் கொண்டுள்ள உறுதியை பிரதமர் அறிவார். அதற்காக அவர் எம்மை மரியாதை செய்கிறார். அவர் அதற்கு உடன்படாமல் இருக்கலாம். அதேபோல அவர்கொண்டுள்ள கொள்கையையும் அரசியலையும் நாம் ஏற்காவிடினும். அவற்றில் அவர் கொண்டுள்ள உறுதியைமதிக்கிறோம்,

நாம் இந்நாட்டில் பெருமைப்படக்கூடிய விஷயமாக அமைந்திருப்பது பாராளுமன்ற ஜனநாயகமாகும்: பலநாடுகள் ஜனநாயகத்தை கைவிட்டுவிட்டன.

எமது வல்லமை எப்போதும் மக்களிடமே தங்கியுள்ளது. எமது இறைமையின் அடிப்படையாக விளங்குவது எமது மக்களே. அந்த இறைமையை உபயோகித்தே மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள். அப்பிரதிநிதிகள் மக்கள் தந்த அந்த இறைமையை பாராளுமன்றத்திலே பயன்படுத்துகிறார்கள்.

நான் எனது தொகுதியிலே நடைபெற்ற கூட்டமொன்றிலே கூறினேன், "பல அரசியல் பிரச்சினைகளில் நாமும் அரசும் மிகவும் கசப்பான முறையில் ஒருவரையொருவர் எதிர்த்துக்கொள்ளுகிறோம்; ஆனால் கடின உழைப்புக்காகவும் நேர்மைக்காகவும் நான் பிரதமரைப்பாராட்டுகிறேன்" என்று கூறினேன்,

பெற்றோலைப்பற்றி ஒபெக் நாடுகளுக்கு மனு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே. பிரதமர் அந்த மனுவில் எம்மையும் கையெழுத்திடுமாறு கோரினார், நாம் அதை வாசித்துப் பார்த்தோம். ஆனால் அதன் முன்னுரையில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்களில்நாம் முழுக்க உடன்படமுடியாமலிருந்தது நாம் நீண்டநேரம் விவாதித்தோம், இரண்டுமணிநேரம் விவாதித்தோம்இதிலே எப்படிக்கையெழுத்திட முடியும். ஆனால் இறுதியாக— அதோ பிரதமர் புன்னகை புரிகிறாரே— அதே போன்ற கவர்ச்சிபுன்னகையை அப்போது உதிர்த்தார். எமது ஆயுதங்களைக் கீழே போடவைக்கக்கூடிய அந்தப்புன்னகை காரணமாக— எண்ணெய் மனுவின் முன்னுரையில் சிலகருத்துக்கள் எமக்கு முழுக்கமுழுக்க முரண்பாடாக இருந்தபோதிலும்— நாம் அதிலே கையெழுத்திட நிர்ப்பந்திக்கப்பட்டோம்,

தலைவர். அவரது புன்னகை உங்களை தவறான பாதையிற் செல்ல வைத்ததா?

வி.என்:: அவரது புன்னகை பலரை ஆயுதங்களைக் கீழே போடவைத்திருக்கிறது. ஆனால் எமது எதிர்ப்பைத்தான் அங்கீகரிப்பதாக அவர்தெரிவித்தார். சில வேளைகளில் சில குறிப்புக்களை அவர் எமக்கு அனுப்புவதன் மூலம் தனது மரியாதையைக்காட்டுவார். இரண்டு கிழமைக்குமுன் எனக்கு ஒருகுறிப்பு அவரிடமிருந்து கிடைத்தது. அது தனிப்பட்ட ஒன்று, பகிடிக்காக அனுப்பப்பட்டது. ஆனால் அவர் எம்மை எவ்வளவு மதிக்கிறார் என்பதையே அதுகாட்டியது: இரண்டு கிழமைக்கு முன் பிரதமர் எனக்கு அனுப்பிய குறிப்பில்— நவா, எப்பொழுது இந்தப்பக்கத்துக்கு வருகிறீர்கள்? என்று கேட்டிருந்தார்;

அது பாரதூரமான கருத்துடன் எழுதப்பட்டதல்ல என்பது எனக்குத் தெரியும், ஆனால் அதைநான்பாதுகாத்து வைத்திருக்கிறேன். அது இப்போதுஎன்னுடைய மகளிடம்இருக்கிறது. அவள் அதை தனது வகுப்புத் தோழிகளிடம் காட்டி; "எனது தந்தையும் விரும்பியிருந்தால் ஒரு மந்திரியாகியிருக்க முடியும்" என்று நம்பிக்கையோடு கூற முடியும் அவளது பள்ளித்தோழிகள், இல்லை இல்லை.இது நரியின் கதைதான் என்று கூறினால்—இக்கடிதத்தை எனது மகள் காட்டுவாள், பிரதமர் எமது இலட்சியத்தை மதிக்கிறார்—நாம் அவரது அரசியலை மதிக்கிறோம், அவர் பிரதமராக இருக்கும் பாராளுமன்றத்தில் நாம் வேலை செய்வது மகிழ்ச்சிக்குரியது:

ஆனால், அதன் பொருள் நாம் எமது கடமையிலிருந்து தவறுவதென்றாகாது, நாம் எமது மக்கள் எமக்கு தந்தஆணையை நிறைவேற்ற நம்மால் முடியக் கூடிய அனைத்தையும் செய்வோம்:

புதிய பாராளுமன்றத்தை நிறுவுவதற்குநீங்கள் போட்டிருக்கும் திட்டத்தைப் பார்த்திருக்கிறோம். கோட்டையில் நீங்கள் நிறுவும் பாராளுமன்றத்துக்கு நம்மில் எத்தனை பேர் வருவோமோ தெரியாது, (குறுக்கீடு) நம்மில் சிலர் அச்சமயத்தில் சங்கிலித் தோப்புக்குப் போவோம்,

பிரதமர்,— ஏன்?

வி,என்.;— உங்களுக்கு சரித்திரம் தெரிந்தால் ஏன் என்பது உங்களுக்குப் புரியும்,

பிரதமர்;— நாம் கோட்டைக்கு 1982ம் ஆண்டு செல்வோம்;

—(பராளுமன்றத்தில் 30,11,79)

---

## சாவகச்சேரி எம். பிக்கு பிரேமதாசா பாராட்டு

"எனது அமைச்சின் நடவடிக்கைகளைப் பாராட்டும் போது கவனமாக இருங்கள்: சாவகச்சேரி எம். பி. சில தினங்களுக்கு முன்னர் என்னை வெகுவாகப் பாராட்டினார். அதனால் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற நேரிட்டது. சாவகச்சேரி எம். பி, நல்லவர்: நம்பிக்கையுடன் கூடிய சிரிப்பு அவருடையது: அருகில் சென்று தடவும்படி எவரையும் தூண்டும் அழகான தாடி அவருக்கு இருக்கிறது, அவர் உடல் நலம் தேறி இங்கு வந்ததைக் கண்ட பின்னர்தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது;

—பீரதமர் பிரேமதாசா (வீரகேசரி 7.12.79)

---

## யாழ் மத்திய நூலகத்தில் சுதந்திரன் இடம் பெறுவதில்லை

### யாழ் மேயர் கூறிய காரணம்

மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. ம. அலோசியஸ் அவர்களின் பின் வரும் கேள்விகளுக்கு யாழ் மேயர் அளித்த பதில்கள்.

கே; யாழ் நகரில் மேற்படி வருடாந்த மானியம் எவ்வளவு தொகை ஒவ்வொரு சனசமூக நிலையத்திற்கும் கொடுக்கப்படுகின்றது?

பதில்: ரூபா 150/- வருடாந்தம்.

கே: இப்பணத்தை இந் நிலையங்கள் எதற்குப்பாவிக்கலாம்?

ப: பத்திரிகைகள்; புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் ஆகியன வாங்கப் பாவிக்கலாம்.

கே: வருடாவருடம் பத்திரிகைகள் வாங்கஇப்பணம் பாவிக்கலாமாகில் ஈழத்தமிழர் இயக்க ஏடான "சுதந்திரனை" இந்நிறுவனங்கள் வாங்குகின்றனவா? இல்லையாகில் இனிமேலாவது இவ்வார ஏட்டை வாங்க நிபந்தனை விதிக்கப்படுமா?

ப: இன்னஇன்ன பத்திரிகைகளைத் தான் வாங்க வேண்டும் என்று நாம் கட்டுப்படுத்த முடியாது.

கே: யாழ் மத்திய நூலகத்தில் இவ்வேடு பெறப்படுகின்றதா? இல்லையாகில் இனிமேல் இடம்பெறுமா?

ப: இல்லை கட்சித்தொடர்பான பத்திரிகைகளை வாங்குவதில்லை என்ற கொள்கையின் அடிப்படையிலேயே மேற்படி பத்திரிகை வாங்கப்படவில்லை;

குறிப்பு: கொழும்புமாநகர சபையின் கட்டுப்பாட்டிலுள்ள பொது நூல் நிலையம் 'சுதந்திரன்' பத்திரிகைக்கு சந்தா செலுத்தி எடுப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

—ஆர்

---

## கல்குடாவில் ஆனை அடி சறுக்குகிறது

### அனைத்திலும் கூட்டணி!

கல்குடா தொகுதியின் ஏறாவூர் பற்று நோ.கூ.சங்க கிளைக்குழுத் தேர்தல்கடந்த 1ம் திகதி நடைபெற்றது. தேர்தல் நடந்த அனைத்து கிளைகளிலும் கூட்டணி சார்பு வேட்பாளர்கள் அமோக வெற்றியீட்டினர்,

தணிக்கை

பின்னர் நடைபெற்ற இத் தேர்தலில் தமிழின எழுச்சியைக் காண முடிந்தது;

சித்தாண்டி

(கல்குடா) ஐ,தே.க. பிரசாரசெயலாளர்எனக் கூறிக் கொள்ளும் செம்மல் சிவலிங்கமும் அவரது குழுவினரும் படுதோல்வியடைந்தனர்.சிவலிங்கம் குழுவினர் ஒரு ஆசனத்தைத்தானும் கைப்பற்ற முடியாது தோற்கடிக்கப்பட்டனர்,

செங்கலடி

பண. அதிகார பலத்தின் உதவியோடு ஆக ஐந்து ஆசனங்களையே ஆனை முகத்தோர் கைப்பற்றமுடிந்தது. யானைச்கட்சியினர் சுயேச்சை என்ற லேபலில் போட்டியிட்டதாலே தப்பிப் பிழைத்தனர்.

வந்தாறு மூலை

கடும் போட்டியின் மத்தியிலும் வேலை வாய்ப்பு போன்று பசப்பு வார்த்தைகள் அபேட்சர்களை கடத்தல் இன்னோரன்ன திருவிளையாடல்களை ஆனைமுகத்தோர் நடாத்தியபோதிலும் 9 ஆசனங்களில், கூட்டணி 7 ஆசனங்களைக் கைப்பற்றியது. இதில் கூட்டணி அபேட்சகர் கடத்தப்பட்டதாலே ஆணைக்குழுவுக்கு இரண்டு ஆசனங்கள் கிட்டியது;

நள்ளிரவு 12 மணியளவில் கிடைத்த தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து கூட்டணி ஆதரவாளர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றினை வந்தாறு மூலையூடாக நடாத்தினர்:

ஈற்றில் வந்தாறுமூலை கிராம சபையின் முன்னாள் உபதலைவரும் ஆலய வண்ணக்கரும், கூட்டணி வேட்பாளர் குழுத் தலைவர் திரு: சு. பீதாம்பரம் நன்றி தெரிவித்துப் பேசுகையில்

தணிக்கை

களுக்கு மத்தியில் ஆனையின் மிரட்டல்களுக்கும் மத்தியிலும் எமக்கு கிடைத்த வெற்றி கிழக்கில் உதய சூரியன் நிலையினைத் தெரிவிக்கின்றதுபோதத்தல்கள்போலி வார்த்தைகளில்மக்கள் தங்களை அடிபணிய வைக்காது கொண்ட கொள்கையைக் கட்டிக்காத்தனர். ஆயுதப் படைகளினால் எம்மக்கள் இடர்பாடு பட்டபோதுதங்களை மந்திரிகள் என்றும் "மட்டக்களப்பார்" என்றும் கூறிக்கொள்பவர்கள் ஒருவார்த்தை தானும்மூச்சு விடாது இருந்தபோது எங்கள் தலைவர் அமிர் அவர்களே எங்களுக்காக குரல் எழுப்பி ஆக்கிரமிப்பினை இல்லாமலாக்கினார். அன்னாருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகூறக்கடமைப்பட்டுள்ளோம் என்று கூறிமுடித்தார்.

(முன்னர் நடக்கவிருந்த இத்தேர்தல் மந்திரியாரின் கட்டளையால் பின்போடப்பட்டது சுதந்திரன் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்)

## சன்சோனி ஆணைக்குழுவுக்கு காரணகர்த்தா அமிர்தலிங்கமே!

"இந்த ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும் என்று திரு. அமிர்தலிங்கம்தான் போராடினார் அவரே இதற்குக் காரணகர்த்தாவாகவும் இருந்தார். திரு. அமிர்தலிங்கத்தின் நடத்தை பற்றியும், அவர் மீது கரிபூசவும் பல்வேறு மூன்றாம் நபர்கள் மூலமாகசாட்சியங்கள் சமர்பிக்கப்பட்டுள்ளன. இக்கமிஷன் முன் இரண்டு முறை சாட்சியமளித்த திரு. அமிர்தலிங்கத்திடம் நேரடியாக விசாரணை செய்ய வேண்டிய பல்வேறு பிரச்சினைகளை அவருடைய சாட்சியங்கள் முடிவடைந்த பிறகு வேறுசாட்சியங்கள் மூலமாக இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இது அவருக்கு வேண்டுமென்றே களங்கம் கற்பிக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

— சன்சோனி ஆணைக்குழு முன் சட்டத்தரணி அண்டர்வூட்

சிங்கள மகாஜன பெரமுன சட்டத்தரணி திரு. கருணாரத்தின: சகல சம்பவங்களுக்கும் திரு. அமிர்தலிங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியுமே பொறுப்பு எமது கருத்து,

## மனித உரிமை சுவரொட்டி ஒட்டியோர் விசாரணை!

யாழ்மாவட்டத்தில்இனங்களுக்கிடையே சமத்துவம் நீதிக்கான இயக்கம் மனித உரிமை இயக்கம் சம்பந்தமாக வெளியிட்டிருந்த சுவரொட்டிகளை ஒட்டியதாக இளங்கோவன் (புங்குடுதீவு) பாலன் (யாழ்ப்பாணம்) இரத்தினம் (கரவெட்டி) சலீம் (யாழ்ப்பாணம்) ஆகிய 4 இளைஞர்கள் பொலிசாரால்விசாரணை செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர், இவ்விசாரணை சம்பந்தமாக இக்பால் என்ற மற்றோர் இளைஞரும் தேடப்பட்டு வருகிறார், அவசரகாலச்சட்டத்தின் கீழ் சுவரொட்டிகளை பொது இடங்களில் ஒட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது,

## மலேசியா தமிழ்ப்பிரமுகர் வீரப்பன் தமிழீழத்திற்கு வருகை!

உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் மலேசியக் கிளைத்தலைவரும் மலேசியாவின் முன்னணித்தமிழ் எழுத்தாளருமான இரா.நா.வீரப்பன் தமிழீழத்துக்கு 7.12.79 இல் வருகை தந்துள்ளார். தற்போதுயாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர், ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் கலை இலக்கியப் பயணம் மேற்கொண்டு இங்கு வந்துள்ளார். யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துக்கும் மற்றும் பல முக்கிய இடங்களுக்கும் செல்லும் இவர் கலை இலக்கிய நண்பர்களைச் சந்தித்து உரையாடி வருகிறார்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க இலங்கைக் கிளையின் தலைவர் குரும்பசிட்டி கனகரத்தினத்துடன் தங்கியுள்ள திரு. வீரப்பன். ஈழப்பயணத்தை முடித்துக்கொண்டு 13ம் திகதி சென்னை புறப்படுகிறார்.

சென்னையில் தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆரை சந்தித்து மொராஷியர் தீவில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகத்தின் இரண்டாவது மாநாட்டுக்கு தமிழக அரசின் உதவிகளைக்கோரவிருக்கிறார்;

## மதங்களுக்கிடையே பாரபட்சங்களை அகற்றுவது சம்பந்தமாக

### பாங்கொக் மாநாட்டில் ஆராய்வு!

பாங்கொக்கில் நடைபெற்ற "கலாசார. மத பாரம்பரியத்தில் மனித உரிமைகளின் இடம்" சம்பந்தப்பட்ட மாநாட்டின் தலைவராக ஜனாதிபதி ஜே. ஆர்-ஜெயவர்த்தனாவின் சகோதரர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தனா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த மாநாட்டில் இருபது நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளார்கள். ஜப்பான், இந்தியா, கிரேக்கம், மேற்கு ஜெர்மனி நாடுகளின் பிரதிநிதிகள் துணைத்தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மத, கலாசார பாரம்பரியங்களுடன் மனித உரிமைகளை இணைப்பது சம்பந்தமாகவும், மதரீதியாக அல்லது நம்பிக்கை சம்பந்தமாக நிலவும் பாரபட்சங்களை அகற்றுவது சம்பந்தமாகவும் இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

பௌத்தம், இந்து, இஸ்லாம். கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களைப் பின்பற்றுவோர் வாழும் இலங்கையின் அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு மட்டும் முதலிடமும், முக்கியத்துவமும் கொடுத்ததன் மூலம், ஏனைய இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களுக்கு காட்டப்பட்டிருக்கும் பாரபட்சங்களை அகற்றுவதற்கும் சகல மதங்களுக்கும் இலங்கை அரசியல் சட்டத்தில் சமஉரிமை வழங்குவதன் மூலம் —மனித உரிமைகளை நிலைநாட்டவும் இலங்கையைச் சேர்ந்த மாநாட்டுத் தலைவர் எச், டபிள்யூ. ஜெயவர்த்தனா நடவடிக்கையெடுப்பாரா என்று மனித உரிமைகளில் நாட்டமுள்ளோர் கூர்ந்துஅவதானித்து வருகின்றனர்.

**மாத்தளையில் சுதந்திரன் புதிய விற்பனையாளர்**

நியூ ரமணி ரேடேர்ஸ்
412, பிரதான வீதி,
மாத்தளை.

## ஜனாதிபதிக்கு சம்--

—1-ம் பக்கத் தொடர்

மும் பீதியும் நிலவுகின்றன, அவசரகாலச் சட்டம் மக்களின் பாதுகாப்பிற்கு எதுவித உத்தரவாதமும் கிடையாது. எனவேதான் ஏனைய இருவரையும் அழைப்பதில்லையென்று முடிவு செய்துள்ளோம். தற்போது அமுலிலுள்ள அவசரகாலச் சட்டத்தின்கீழ் நெடுங்கேணிக் குடியிருப்புப்பகுதியினருக்கு இராணுவத்தினாலும் பொலிசாராலும்பலகொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இராணுவம் பொலிசார் மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் ஒன்று தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழக வவுனியா செயலாளரினால் ஜனாதிபதிக்கு எழுதப்பட்டுள்ளது. அதன்நகல் ஒன்றினையே ஆணையாளராகிய உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்"

இவ்வாறு சட்டத்தரணி அண்டர்வூட் தெரிவித்தார்,

ஆணையாளர்: குறித்த ஆவணத்தை அரசதரப்புச் சட்டத்தரணியிடம் கையளிக்கலாம்.

அரச தரப்பு சட்டத்தரணி திரு, பீ: தென்னக்கோன் குறித்த ஆவணத்தைப் படித்தபின்னர் அதில் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராகப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாக ஆணையாளரிடம் தெரிவித்தார்,

"இக்கடிதத்தையொட்டி ஆணையாளர் நடவடிக்கையெடுத்தால், அது இந்த ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த அதிகாரிகளுக்கு நியாயமாக மாட்டாது. குற்றச் சாட்டுக்களும் பாரதூரமானவை" என்று அரச சட்டத்தரணி தெரிவித்தார்;

மேற்படி ஆவணத்தைப் பெற்று வேண்டிய நடவடிக்கையெடுக்கும் அதிகாரம் ஆணையாளருக்குண்டு என்று சட்டத்தரணி மாணிக்கவாசகம் தெரிவித்தார்.

ஆணையாளர்; (கடிதத்தைப்படித்துவிட்டு) இக்கடிதம் 1979 டிசெம்பரில் எழுதப்பட்டது. தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகச் செயலாளர் நெடுங்கேணி வவுனியாவிருந்து எழுதப்பட்டிருக்கிறது: கடிதத்தின் உள்ளடக்கத்தை நான் வெளியிட விரும்பவில்லை. ஆனால் இதிலேகுறிப்பிடத்தக்க எதுவும், ஆணைக்குழுவின் முன்னுலுள்ள பிரச்சினையில் தீர்ப்பு எடுப்பதற்கு பயன்படாது. எனவே நான்இக்கடிதத்தை ஏற்கத் தயாராக இல்லை,'

## இராசதுரையின்—

—1-ம் பக்கத் தொடர்

களப் பொறுப்புக்கூடவிடப் படவில்லை;

இந்த அமைச்சின் கீழ்சாரதிஉட்பட ஆக 21 உத்தியோகத்தர்களே, வேலை செய்கிறார்கள், இவர்களில் சாரதி. அலுவலகத் தொழிலாளர்கள் தமிழ்த் தட்டெழுத்தாளர் ஆங்கிலத்தட்டெழுத்தாளர் எழுது வினைஞர் ஆங்கில சுருக்கெழுத்தாளர் ஆகியோருட்பட 14 பேர் தற்காலிக ஊழியர்களே.

அமைச்சர் செல்லையா இராசதுரையின் பாரியாரான திருமதி இராசலட்சுமி இராசதுரையே அமைச்சரின் அந்தரங்கச் செயலாளராகநியமிக்கப்பட்டுள்ளார்.

இந்து சமய இந்துக்கலாசார பிரிவுப் பணிப்பாளராக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப் பட்டிருக்கும் இந்த அமைச்சில், தமிழ் மொழி சட்ட அமுலாக்கல் பிரிவுக்குபொறுப்பான அதிகாரி எவரும் நியமிக்கப்படவில்லை.

ஆக ஏழுபேரே இந்த அமைச்சில் நிரந்தர உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர்.

1979ம் ஆண்டுக்கு திறைசேரி பொதுவைப்புக் கணக்கிலிருந்து அவசரத் தொகையாக ரூபா 5 இலட்சம்ஒதுக்கப்பட்டது.

## மக்கள் எம்மைத்--

—1-ம் பக்கத்தொடர்

துடன் கூற ஆயத்தமாக இருக்கிறேன். சில மாதங்களுக்கு முன் என்னிடம் ஒரு பெண்மணி வந்து முறைப்பாடு செய்தார், தன் மகளுக்கு தட்டெழுத்தாளர் உத்தியோகம் கொடுப்பதற்கு 3000/- ரூபா கேட்கப்பட்டது என்று நான் நிதி அமைச்சரிடம் சென்று முறைப்பாடு செய்தேன். அவர் உடனே இலஞ்சத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இதை விசாரணை செய்யும்படிகேட்டார் அந்த விசாரணைக்கு உடந்தையாக நான் இருந்து அந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரை அங்கு அழைத்துச் சென்றேன்";

இன்று எங்கள்சிபார்சிலே தொழில் வாய்ப்புக்கொடுப்பதை அரசாங்கம் நிறுத்தியிருக்கிறது. கூட்டணியைச் சேர்ந்தவர்கள் புலிகள், அரசாங்க சேவையிலே இடம்

பெறக்கூடாது என்ற காரணத்தால் நிறுத்தியிருக்கலாம்; ஆனால் அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வந்த ஆசிரிய நியமனப் பட்டியலலேயிருந்த 200 சொச்சம் பேர்களிலே எத்தனை புலிகள் இடம்பெற்றிருக்கிறார்கள்? என்ன காரணத்துக்காகபுலிகளுக்கு இடம் கொடுத்ீர்கள்? இதிலிருந்து, என்ன அடிப்படையிலே ஆசிரிய நியமனங்கள் கொடுக்கப்படுகின்றன என்பது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது.

இந்தச் சபையிலே பேசிய பல அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் மிகவும் இனிமையாகவும் அழகாகவும் ஒற்றுமையை நாடிக் கேட்டார்கள். இரு இனங்களும் ஒன்றுபட வேண்டும் என்று கூறினார்கள். அவர்கள் சொல் அளவிலே இனிமையாக பேசுகிறார்கள்; உறவு பார்க்கிறார்கள்; ஆனால் செயலளவிலே பாரபட்சம் காட்டுகிறார்கள், கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் (ஜனாப் அப்துல் றசாக் மன்சூர்) அவர்கள் பேசும் பொழுதும் கூறினார். அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதற்குக்காரணம் நாங்கள் அவர்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பதால் தான் என்று. ஆனால், எமது பாராளுமன்ற உறுப்பினர்களிலே மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துடன சேர்ந்து இருக்கிற நிலையிலே நீங்கள் பாரபட்சம் காட்டினால் நிச்சயமாக தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு நீங்களாகவே வழிவகை செய்கிறீர்கள்;

ஜனாப் அப்துல் றஸ்ஸாக் மன்சூர்: மட்டக்களப்புக்கு 240 உத்தியோகம் எடுத்தது போல நீங்களும் எடுக்கலாம் வாருங்கள் சேரலாம்.

கணேசலிங்கம்; சபாநாயகர் அவர்களே, இதற்காக நாங்கள் சபைக்கு வரவில்லை.

எஸ். கதிரவேலுப்பிள்ளை: சும்மாவா? காசுக்கா?

திரு. பீ. கணேசலிங்கம்; மட்டக்களப்பிலே சூறுவளி ஏற்பட்டு ஓராண்டு ஆகிவிட்டது. எங்கள் கட்சியைச் சேர்ந்த ஓரிருபாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்துவிட்டதால் மக்கள் தங்கள் கொள்கையை ஏற்றுக்கொண்டார்கள் என்று அரசாங்கம் நினைத்தால், நான் அவர்களுக்குக் கூறுகிறேன்; மட்டககளப்பு மாநகரசபை தேர்தலை நடத்துங்கள். சூறுவளி முடிந்து ஒருவருடம் முடிந்துவிட்டது, ஏன் இன்னும் மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலை நடத்தவில்லை என்று கேட்கின்றேன். ஜனாதிபதி அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட சூறுவளி புனரமைப்பு வேலைகளில் 75 சதவீதம் முடிந்து விட்டது என்று கூறி இருக்கிறார். அப்படியானால் நிச்சயமாக மட்டக்களப்பு மாநகரத் தேர்தலை அர.சாங்கம் நடத்தலாம் இதற்கு அரசாங்கம் தயங்குவதில் இருந்து மட்டக்களப்பு மாவட்ட மக்கள் உங்கள் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது உங்களுக்கே தெரியும்.

ஜனாப் அப்துல் றஸ்ஸாக் மன்சூர்; அரசாங்கம்தயங்கவில்லை; உரிய காலத்தில் தேர்தலை நடத்துவோம்

கே: துரைரத்தினம்; உரிய காலம் எப்பொழுது?

எஸ்: கதிரவேலுப்பிள்ளை, உரிய நேரம் எப்பொழுது?

## 22,000 ஆசிரிய நியமனத்தில் 600 பேர் கூடத் தமிழர் இல்லை!

'தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஆசிரியர் நியமனங்களில் போதியளவு இடம் கிடைக்கவில்லை, கடந்த அரசு 80 வீத சிங்களவர்களுக்கும், 12 வீத தமிழர்களுக்கும், 8வீதமுஸ்லிம்களுக்கும் நியமனம் கொடுப்பதாக அறிவித்தபோது, 22.5வீதமாக உள்ள தமிழர்களுக்கு 12 வீதமா எனக்கேட்டு நாம் அதை எதிர்த்தோம். இந்த அரசு 22 ஆயிரம் நியமனங்களை செய்தது. ஆனால் அதில் மூன்று வீதம்கூட தமிழர்கள் இல்லை; 2 வீதம் கூட முஸ்லிம்களுக்கு இருந்திருக்காது. 22 ஆயிரம் ஆசிரியர்களில் 600 பேர் கூட இல்லை. சென்ற அரசைவிட இந்த அரசு பாரபட்சம் காட்டுகிறது";

—பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது,